மாதானம்

# ஸ்ரீ முத்துமாரியம்மன் தரிசனம்



காஞ்சி. இரா. குப்புஸ்வாமி வரைந்தது

மாதானம் ஸ்ரீ முத்துமாரியம்மன்

ஆக்கியோன் :

காஞ்சி. இரா. குப்புஸ்வாமி, B.A.

உ

ஸ்ரீ முத்துமாரியம்மன் துணை

மா[illegible]ணம்

# ஸ்ரீ முத்து மாரியம்மன் தரிசனம்

## கண்ணிகளும் தலவரலாறும்

இந்நூல்

காஞ்சி குடிக்காடு தலச் சுருக்கம்,

காஞ்சி காமாட்சி அம்மை பிள்ளைத்தமிழ்,

திருப் பெருமங்கலத் தலவரலாறு,

மற்றும் பல நூல்கள் இயற்றியுள்ள

**திருவாளர் காஞ்சி. இரா. குப்புஸ்வாமி, B. A.,**

அவர்களால் ஆக்கப்பெற்று

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில்

பரம்பரை தர்ம கர்த்தா வடகால் துரை குடும்பத்தைச் சேர்ந்த

**திரு. வ. சு. செல்வம் அவர்களால்**

சீர்காழி

ஸ்ரீ மீனாக்ஷி அச்சகத்தில் பதிப்பிக்கப்பெற்றது.

பதிப்புரிமை பெற்றது.

1961

பிரதி விலை 25 ந. பை.

முதற்பதிப்பு 1000 பிரதிகள்.

# ஒரு நினைவுச் சின்னம்

உடையார்பாளையம் இளைய ஜமீன்தார் ராவ்சாஹிப் திரு. கச்சி கந்தசாமிஉடையாருக்கும் திருமதி அம்மணிஅம்மை யாருக்கும் அருந்தவப் புதல்வியாகத் தோன்றி, மாதானம் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் பரம்பரை தர்மகர்த்தா திரு. கு. சுப்பராய ராவுத்தமிண்ட நாயனுரின் புதல்வரும், இந்நூல் பதிப்பாசிரியருமான திரு. செல்வம் என்பவரின் வாழ்க்கைத் துணைவியாகச் சீரும் சிறப்பு மிகப் பொலிந்து மங்கல ஒளியில் இயற்கை நிலையை அடைந்துள்ள, நங்கையர்க்கு நாயகி, **ஹேமாம்புஜவல்லி,**

"தற்காத்துத் தற்கொண்டாற் பேணித் தகைசான்ற
சொற்காத்துச் சோர்விலாள் பெண்,"

என்ற பொதுமறையின் படியும்,

**कार्येषु दासी करणेषु मन्त्री**
**रूपेषु लक्ष्मी क्षमया धरित्री ।**
**स्नेहेच माता शयनेतु वेश्या**
**षट्कर्म युक्ता कुलधर्म पत्नी ॥**

"கார்யேஷு தாசி கரணேஷு மந்த்ரீ
ரூபேஷு லக்ஷ்மீ, க்ஷமயா தரித்ரீ
ஸ்நேஹேச மாதா சயநேது வேஸ்யா
ஷட்கர்ம யுக்தா குலதர்ம பத்நீ."

என்ற நீதி சாஸ்திரத்தின் படியும் உயர்ந்த மனைவிக்குரிய கடமையைச் செலுத்திய பெண் திலகம்.

இக்கற்புக் கரசியின் நினைவு மலராக இச்சிறு நூல் வெளியிடப் படுகிறது.

விளங்குக கற்பின் திறம்!

உ

சீகாழி எல். எம். சி. உயர் பள்ளி

தமிழாசிரியர்

## வித்துவான் த. சுந்தரேசன் அவர்கள்

அளித்த

# சிறப்புப் பாயிரம்

———:o:———

சீரார்ரும் காழிநகர் சேர்ந்திலங்கு
மாதானச் சிற்றூர் தன்னில்
பாரோர்கட் கருள்புரியத் திருக்கோயில்
கொண்டபரா சக்தி யான
பேராரும் திருமுத்து மாரியம்மன்
மான்மியத்தின் பெருஞ்சி றப்பும்
ஏராரும் மாதானத் தலச்சிறப்பும்
அறிந்துமக்கள் ஏத்திப் போற்ற, 1

பல்வளமார் வடகாலில் பரம்பரையிக்
கோயில்பரி பாலித் தேத்தும்
செல்வமெனும் ராவுத்த மிண்டநயி
ஞரென்ற செம்மல் கேட்பச்
செல்வவள மாதான மாரியம்மன்
அருள்வளத்தைத் தெரிக்கும் நூலாய்ச்
சொல்வளமார் தரிசனமும் தலச்சிறப்பும்
இயற்றிநல்கும் தோன்றல் என்போன், 2

சான்றோர்கள் வாழ்தொண்டை மண்டலத்திற்
காஞ்சியெனுந் தலத்தே தோன்றி
ஏன்றவகை ஆங்கிலத்தைப் பாங்குறவே
பயின்றுமதில் பட்டம் ஏற்றும்
தான்றனிமைப் பதவியுற்றும் தஞ்சைமா
வட்டத்தில் தாசில் தாராய்
ஆன்றதனி உத்யோகம் தாங்கியும்செந்
தமிழ்ப்பணியை ஆற்றும் அண்ணல்; 3

செந்தமிழின் வரகவியாய்க் காஞ்சிகா
மாட்சிபிள்ளைத் தமிழ்நூல் செய்தோன்
பைந்தமிழின் இயல்புணர்ந்தோன் பதவியினில்
பெருமையுற்றும் பணிவே பூண்டோன்
எந்தநிலை யுறினும்தன் இதயமதில்
இறையடியே ஏத்தும் தூயோன்
நந்தமிழ்த்தாய் புகழ்பரப்பும் குப்புஸ்வா
மிப்பெயர்கொள் நாவ லோனே. 4

பூவுலக அன்பரெலாம் புந்திதனில் எண்ணுவரம்
யாவும் அளித்துநலம் ஆண்டருளக் — கோயில்கொண்டு
மாதானம் மேவுமுத்து மாரியம்மன் என்றஅருள்
மாதாவை நெஞ்சேநீ வாழ்த்து.

உ

ஸ்ரீ முத்து மாரியம்மன் துணை

# மாதானம் ஸ்ரீ முத்துமாரியம்மன்

## த ரி ச ன ம்

## நூல் வந்த வாறு

சீகாழி வட்டாரத்தில் வரிசைபத்து வடகால் ஒரு கிராமம். அடியேன் பொதுப்பணி செய்கையில் இக் கிராமத்திற்கு 26—1—61ல் போக நேர்ந்தது. அது சமயம் அவ்வூர் பெருநிலக்கிழார் குடும்பத்தைச் சேர்ந்த திருவாளர் வ. சு. செல்வம் அவர்களைத் தெய்வச் செயலாகச் சந்திக்க நேரிட்டது. அவர்கள் அருட்செல்வம், பொருட்செல்வம் இரண்டும் ஒன்றுசேர்ந்து உரு எடுத்து "செல்வம்" என்ற பெயரால் விளங்குபவர்கள் என்று அடியேன் சிறிதளவு இறைபணியில் ஈடுபடுவதை அவர்கள் பாராட்டியதிலிருந்தும் அவர்களின் குடும்பக் கோயிலாகிய மாதானம் ஸ்ரீ முத்து மாரியம்மனின் வரலாறு எழுதி அவர்களின் செலவில் அச்சிட்டு வெளியிடுவதாக விருப்பத்தைத் தெரிவித்ததிலிருந்தும் நன்கு விளங்கியது. உலக மாதாவாகிய ஸ்ரீ முத்து மாரியம்மனுக்கு அவர்கள் ஒரு செல்வப் பிள்ளை என்னும் முறையில் அவ்வம்மையின் பெருமையை உலகுக்கு விளக்க வேண்டுமென்ற பெரும்பணிக்கு மிகச் சிறியேனை ஈடுபடுத்த அவர்கள் விரும்பியது ஸ்ரீ முத்து மாரியம்மையிடம் அவர்களுக்குள்ள தலையோங்கிய பக்தியே காரணமாகும்.

அவர்களின் விருப்பம் ஸ்ரீ முத்து மாரி அம்மனின் திரு உள்ளத்தின்படி நிறைவேறு மென்று உரைத்துச் சென்றேன். அவர்கள் விரும்பிய வண்ணம் இன்று,

12—2—61ல் ஸ்ரீ முத்து மாரியம்மனைத் தரிசித்தேன். இந்த விசேட தினத்தில் பிரத்தியேகமாக அபிடேகம், ஆராதனை நடந்தன. இத் தரிசனத்தையே நூலின் தலைப் பாக அமைத்து ''மாதானம் ஸ்ரீ முத்து மாரியம்மன் தரிசனம்'' என்னும் இச்சிறு புத்தகம் எழுதத் துணிந் தது. இந் நூலில் நான் கண்ட தரிசனத்தைப் பற்றி விளக்குவதோடல்லாமல் அன்பர்கள் இப்பராசக்தியைக் கண்ணாரக் கண்டு ஆனந்திப்பதற்கு இஃது ஒரு வழி காட்டியாகவும் இருக்குமென எண்ணுகிறேன்.

இந் நூல் இரண்டு அங்கங்களை உடையது. ஸ்ரீ முத்து மாரியம்மன் தரிசனத்தை வருணிக்கும் கண் ணிகள் முதலாவதாகும். இரண்டாவது தல வரலாறு என்பது.

இக் கண்ணிகள், பெண்கள் கும்மி அடித்தும், கோலாட்டம் போட்டும் ஸ்ரீ முத்து மாரியம்மனைப்பற்றிப் பாடி ஆடவும், சிறுவர் கிராம நடனத்துக்குப் பாடமாக வும், அன்பர்கள் கைச் சிலம்புகொண்டு சிலம்பிட்டு அம்மனை வருணிக்கவும், மற்றும் காவடி, கரகம் இவை களைத் தாங்கி, தக்க பக்க இசைக் கருவிகளுடன் பாடிச் செல்லவும் பயனுகும் என எண்ணுகிறேன். ஸ்ரீ முத்து மாரியம்மன் வரலாற்றில் அன்பர்களுக்கு அவசியமான எல்லாத் தகவல்களையும் அமைக்க வேண்டுமென்ற பொது நோக்குடன் வரலாற்றை எழுதியுள்ளேன்.

அன்பர்களின் கண்ணில் மாதானம் ஸ்ரீ முத்து மாரியம்மனின் திரு உருவம் என்றும் நிலைத்து நிற்க வேண்டி அம்மனின் திரு உருவப் படம் அடியேன் வரைந்தது இப் புத்தக மேல் அட்டையின் முன்புறம்

அச்சிடப்பட்டுள்ளது. அஃதல்லாமலும், "அன்பர்களுக்கான அறிவுரைகள்" என்னும் தலைப்பின் கீழ் சிறு வாக்கியங்கள் உயிரெழுத்து வரிசையில் எழுதி நூலின் முடிவில் சேர்த்துள்ளேன். இவை இந்நூல் பதிப்பாசிரியரின் விருப்பத்தின் வண்ணம் செய்தவையாகும்.

இப் பணியில் அடியேனை ஈடுபடுத்திய ஸ்ரீ முத்து மாரியம்மன் கோயில் நிர்வாக தர்மகர்த்தர்களுக்கும் அவர்களின் குடும்பத்தினருக்கும் அடியேனின் வணக்கம் கலந்த நன்றி உரித்தாயது.

கோயில் நிர்வாகஸ்தர்களுடைய விருப்பை நிறைவேற்ற வேண்டுமென்ற பேரவா காரணத்தினலேயே இந் நூலை அடியேன் எழுதத் துணிந்ததே யன்றி அதற்கான ஆற்றல் காரணமாக அல்ல. ஆகையால் இந் நூலில் காணக்கூடிய குற்றங்குறைகளை மெய்யன்பர்கள் பொறுத்துக்கொண்டு ஸ்ரீ மாரியம்மனின் பேரருளுக்குப் பாத்திரர்களாக ஸ்ரீ முத்து மாரியம்மனை இறைஞ்சுகின்றேன்.

நூல் முழுமையும் உற்று நோக்கியதோடு அமையாது, சிறப்புப்பாயிரமும் மனமுவந்து எழுதி உதவி இதைச் சிறப்பித்துள்ள சீகாழி வித்துவான் திருவாளர் த. சுந்தரேச ஆசாரியா ரவர்களுக்கு அடியேனுடைய உள்ளங் கலந்த நன்றி மிகப் பெரிதும் உரித்தாயது.

இந் நூல் எழுதி முடிப்பதற்குத் தோன்ருத் துணையாக இருக்கும் பெருங்கருணைத் தடங்கடலாகிய அவ் வம்மையின் மலரடி அடியேனின் சென்னியதே!

மாதானம்,
12—2—'61.

காஞ்சி. இரா. குப்புஸ்வாமி.

# இப்புத்தகத்தில் அடங்கியவை.


ஸ்ரீ முத்துமாரியம்மன் திரு உருவப்படம் (மேல் அட்டையில்)
ஒரு நினைவுச் சின்னம் .... ...
சிறப்புப் பாயிரம் .... ....
நூல்வந்த வாறு .... ....


## நூல்.


மாதானம் ஸ்ரீ முத்து மாரியம்மன் தரிசனம் ....
விநாயகர் காப்புச் செய்யுள் .... ....

1 கண்ணிகள் .... ...

கண்ணிகளில் உள்ள அரும்பதமும் உரையும்

2 தலவரலாறு .... ....

இதில் அடங்கிய 19 அத்தியாயங்களாவன:-

1 கடவுளின் அருவமும் உருவமும் ....
2 ஸ்ரீ முத்துமாரியம்மனைப்பற்றிய புராணவரலாறு
3 தலத்தின் இருப்பிடமும் பெயர் வந்தவாறும்
4 தலமூர்த்திகளின் வரலாறு ....
5 திருப்பணியும் திரு ஆபரணமும் ....
6 கோயிலின் அமைப்பு .... ....
7 மூலத்தான அம்மையின் திரு உருவம் ....
8 கோயில் உற்சவங்கள் .... —
9 கோயிலுக்குள்ள நிலம் .... ....
10 அம்மையின் அருட் சக்தி .... ....
11 கோயிலில் நிகழ்த்தும் சுபங்கள் ....
12 ஸ்ரீ முத்துமாரியம்மனுக்குத் தொடர்பு உடைய மற்றக் கோயில்கள் ....
13 தலவிருட்சங்கள் .... ....
14 இத்தலத்தின் தீர்த்தங்கள் .... ....
15 தல விசேடம் ... ....
16 கிராமப் பொதுத் தகவல்கள் ....
17 பிரயாணிகள் வசதி .... ....
18 கோயில் நிர்வாகம் .... ....
19 ஸ்ரீ முத்துமாரியம்மன் தரிசனப் பயன். ...

உ

ஸ்ரீ முத்து மாரியம்மன் துணை

# மாதானத்தில் கோயில்கொண்டு எழுந்தருளியுள்ள

# ஸ்ரீ முத்து மாரியம்மன் தரிசனம்

## விநாயகர் காப்புச் செய்யுள்

செம்மைநிறை மாதானச் சீரார் அருள்மாரி
அம்மையின்மேல் நூல்எளியேன் ஆக்குதற்(கு)—எம்மையாள்
வென்றி மதவேழ விக்கினவி நாயகனுங்
கன்றி னிணையடியே காப்பு.

## 1. கண்ணிகள்

ஸ்ரீ முத்து மாரியம்மன் காப்புச் செய்யுள்

*மாரிவ ழங்குமா தானம்இ டங்கொளும்*
*மாரியுன் சேவடி கண்டனன்யான்*
*பாரினில் நின்புகழ் பாடப்ப ணித்தனை*
*பாடுவன் காத்தருள் மாரியம்மா !*

---

*பாருக்கு ளேஉயர் பாரத நாட்டினில்*
*பத்திமி குந்தமிழ்த் தேயத்திலே*
*பேருக்கு ளேஉயர் சோழர்தம் மண்டலம்*
*பேணிஅ மர்ந்தனை மாரியம்மா !* (1)

பூவிரி சோலைகள் மல்கிய தாகிய
பொன்னியின் நேர்வட பாரிசத்தில்
காவிரி துள்ளிந டம்புரி கின்றஅக்
காட்சியைக் காண்டிஎம் மாரியம்மா ! (2)

பார்ப்பதி தந்தஅப் பாலமு துண்டுபண்
பாடிய விப்பிரன் அன் றுதித்த
சீர்ப்பதி காழிவட் டாரத்தி லேதலம்
தேர்ந்தும கிழ்ந்தனை மாரியம்மா ! (3)

வையகத் தோமுனைக் கைதொழு தேநிதம்
வந்தனை செய்துநல் வாழ்வுபெற்றே
உய்யமா தானம்ள னும்பதி மேவிய
உத்தமி யேமுத்து மாரியம்மா ! (4)

வீரனே டாரிய மாலைஓங் தாயியும்
மேதகு பேச்சியும் நின் துணையாய்
வீரிள னத்தகுங்க் ரீடம்பு னைந்தலர்
மீதமர் கின்றஎம் மாரியம்மா ! (5)

கோமயங் கொண்டுமெ ழுக்குசெய் தேயங்கு
கோலமிட் டெங்கணும் வாசமிகும்
ஓமம்பு கைந்திட துப்புர வெய்திய
துன் திரு ஆலயம் மாரியம்மா ! (6)

நெய்யின்வி ளக்கொளி எங்கும்இ ருட்கெட
நீண்டுவ ளர்ந்தது பேரொளியாய்
மெய்ம்மைவி ளக்குவ தாகிய நின்னொளி
மேன்மைமி குந்தது மாரியம்மா ! (7)

வாயிலில் தோரண மாவிலை வார்குலை
வாழையும் தூக்கினர் பந்தலிலே
கோயிலில் தென்னைப னங்குலை யும்கட்டி
கோலம்செய் கின்றனர் மாரியம்மா ! (8)

பொங்கர வம்பதம் தாங்கிஅ மர்ந்திட
புற்றெழு நாகம்கு டைநிழற்ற
அங்கும்இங் கும்பணக் கூட்டம்எ ழுந்தசைந்
தாடுவ வேமுத்து மாரியம்மா ! (9)

சுற்றிநெ ருப்பெழு வண்ணம்பி ணஞ்சுடத்
தோன்றுவெம் பேயுடன் ஆட்டுகந்தாய்
பற்றிஎ ழுஞ்சுட ரிற்களி கொண்டுபண்
பாடிந டம்பயில் மாரியம்மா ! (10)

நெற்றியில் குங்குமச் சாந்தணிந் தாங்குவெண்
நீற்றையும் பூசிய தோரழகைக்
கற்றவ ராம்கலை வாணரும் காவியம்
கட்டஅ றிந்திலர் மாரியம்மா ! (11)

காதணி தோட்டொளி காணக்கண் கூசுது
கண்டவ ரோஇலை கண்நிமிர்ந்தே
ஆதவ னச்சிறு மின்மினி ஆக்குவ
அவ்வணி என்பரால் மாரியம்மா ! (12)

முத்தம்உ திர்க்கின்ற செங்கனி வாயினில்
மூரல்அ ளிக்கின்ற பேரருளைச்
சித்தம்நெ கிழ்ந்தெமக் கின்றளிப் பாய்எனத்
தேருகின் றேம்மனம் மாரியம்மா ! (13)

கட்கடை நின்றெழு தண்ணரு ளில்படி
காலம்ஈ தென்றுயான் உள்மகிழ்வால்
பட்டிடை யாய்உனை முப்பொழு தும்தொழு
பாக்கியம் எய்தினன் மாரியம்மா ! (14)

நாதகண் டாமணி நாஅசைத் தாடுது
ஞாலத்தெல் லோரையும் கூப்பிடுது
வேதம்ஒ லிக்கும்உன் சந்நிதிக் கேவர
வேண்டிஅ ழைக்குது மாரியம்மா ! (15)

வேண்டுவ ரந்தர வேண்டும்ம னத்தொழு
மேதினி யோர்க்கருள் வித்தகியே
காண்தகு காட்சிஎம் சிந்தையி லேதினம்
காணஅ ருட்செயும் மாரியம்மா ! (16)

வெம்பிணி யாவையும் தீர்க்கும ருந்தென
வேப்பிலே கையில்பி டித்தவளே
எம்பிணி தீர்ப்பது நீயலால் வேறிலே
என்றுணர் வாய்முத்து மாரியம்மா ! (17)

நீண்டச ரக்கொடி போன்றவி ளக்கொளி
நேரேவி ளங்குது சந்நிதியில்
வேண்டிவ ணங்கும்என் நெஞ்சினி லேயது
மிக்கவி ளங்குது மாரியம்மா ! (18)

மஞ்சள்கு ளித்தங்கம் தூய்மைய ராய்ப்புது
மஞ்சள்க லிங்கம்இ டைக்குடுத்தி
அஞ்சனக் கண்ணிஉன் ஆலயத் தெய்துமவ்
வன்பரை ஆதரி மாரியம்மா ! (19)

பால்அபி டேகம்கொள் பத்தினி யேஎங்கள்
பால்அளி கொண்டநல் பான்மையளே
மால்அவன் தங்கைஎம் அம்மைய ளேஉன்தன்
மைந்தரை ஆட்கொள்ளும் மாரியம்மா ! (20)

சந்தம ணங்கமழ் கந்தம ணம்மலர்த்
தங்கிஎ ழும்மக ரந்தமணம்
தந்தும னத்தொரு சாந்திஅ ளிக்குதுன்
சந்நிதி எங்கணும் மாரியம்மா ! (21)

கண்ணைஅ ளித்தருள் என்பவ ரோடுனைக்
காணஅ ருள்செயல் வேண்டும்என்று
மண்ணில்கி டந்தடி ஏத்திநிற் பார்தமை
வாழ்விக்க வந்தஎம் மாரியம்மா ! (22)

கண்டுவி யப்பர்கள் நின்கடை நோக்கினைக்
காத்தருள் என்றுக ரங்குவிப்பார்
மண்டும்அன் பால்உளம் தன்வய மற்றவர்
வந்தடி ஏத்துவர் மாரியம்மா ! (23)

முன்னைவி னைப்பயன் சேரஒட் டாதருள்
முண்டகக் கண்ணிஎன் றென்றிறைஞ்சி
முன்றில்ப டிந்தழு கண்ணிய ரானவர்
முன்வர வேண்டும்எம் மாரியம்மா ! (24)

குற்றம்பொ றுத்தருள் உத்தமி யேஎங்கள்
குற்றம்த விர்த்தருள் நற்குணியே
உற்றஉ யிர்த்துணை நீயல வோஎமக்
குன்னைய லால்இலை மாரியம்மா ! (25)

தெங்கின் குரும்பைநீர் ஆடும் விருப்புடை
தேவிஎ னத்துதி செய்யுநரை
பொங்குந லம்பெறும் ஆறருள் வாய்என
போற்றுவன் நின்னடி மாரியம்மா ! (26)

அந்தமி குந்தப ரம்பரை யேஎமை
ஆதரித் தாண்டருள் ஆரமுதே
சுந்தரி யேசுயஞ் சோதிஎ னத்தகும்
தோத்திரம் கொண்டனை மாரியம்மா ! (27)

பம்பைஅ டித்துநின் சந்நிதி யில்கோடி
பத்தர்து திப்பல பாடுகின்றார்
நம்பும்எ மக்கருள் செய்யும்உன் கோயிலை
நாடும்ப டிச்செயும் மாரியம்மா ! (28)

சென்னியில் அஞ்சலி கூப்புகின் றார்பலர்
சேவடி காணவி ரும்புகிறார்
மன்னிஎன் குற்றம்எ னப்பணி வார்எங்கள்
மாதர சேமுத்து மாரியம்மா ! (29)

கொட்டும்உ டுக்கைஒ லிக்குதங் கேமக்கள்
கூடிச்சி லம்புகொண் டார்த்தசைய
எட்டுதி சைக்குளே முட்டவ திர்ந்திட
எங்கும்ஒ லிக்குது மாரியம்மா ! (30)

சிலேயோ டுத்திரி யங்கொணர்ந் தார்பலர்
தீட்டும ணிப்பதிபூண் கொணர்ந்தார்
மாலேம ணங்கமழ் வாசம்எ ழும்படி
வண்தமி ழேஅணி மாரியம்மா ! (31)

தப்பைஅ டிப்பர்கள் சங்கம்ஒ லிப்பர்கள்
தாளம்இட் டேகுழல் ஊதுவார்கள்
கைப்பிடித் தேபல வாச்சியத் தோடும்எக்
காளம்இ யம்புவர் மாரியம்மா ! (32)

காவடி ஏந்திய கையர்கள் ஓர்புரம்
கைத்தலத் தேஅனல் கொண்டசைவர்
சேவடி சிந்தையில் வைத்தவர் காணிக்கை
சென்று செலுத்துவர் மாரியம்மா ! (33)

ஏலமோ டுஞ்சுக்கு சர்க்கரை தூவிய
இன்னமு தாயநெய் மாவிளக்கு
சாலஅன் போடுதம் சென்னியி லேவைத்துச்
சந்நிதி எய்தினர் மாரியம்மா ! (34)

மோதகம் தேன்குழல் அப்பவ கையொடு
மொச்சைவ ருக்கத்தின் சுண்டலவை
ஓதனங் கள்பல செய்துநி வேதனம்
உன்முனம் வைக்கின்றூர் மாரியம்மா ! (35)

அங்குய வர்ச்செயும் புத்தம்பு துக்குடத்
தாவின்நல் பாலொடு பச்சரிசி
பொங்கிஎ டுத்துமுன் வைத்துப்ப டைத்துனேப்
போற்றுவர் அன்பர்கள் மாரியம்மா ! (36)

பூங்கர கம்சென்னி வைத்தசை வார்பலர்
புட்பத்தி ருத்தோர்கள் செய்திழுப்பார்
வாங்கிய வாள்கரத் தேந்துவர் பேச்சற
வாய்பிணித் தோர்பலர் மாரியம்மா ! (37)

முற்றுஇ ளந்தென்னை கண்திறந் தேவைப்பர்
முப்பழ மோடுசெந் தேனும்வைப்பர்
வெற்றிலை தக்கோலம் சாதிசா பத்திரி
மேலும்முன் னேவைப்பர் மாரியம்மா ! (38)

எண்ணிய எண்ணம்நி றைவேற்றுவன் என்னுமோர்
இன்சொல்அ ளித்தருள் நோக்குடனே
மண்ணவ ருக்கெலு மிச்சையு டன்திரு
நீறும்வ ழங்கும்எம் மாரியம்மா ! (39)

உத்தமி முத்தென ஆயிரம் கண்ணுடை
ஒண்தொடி முண்டகக் கண்ணழகீ
பத்தினி காருணி வித்தகி கர்த்தகி
பட்சமோ டாண்டருள் மாரியம்மா ! (40)

நற்றுணை மற்றொரு தேவிலை நீயலால்
நம்பிவந் தேன்உனை நாயடியேன்
பற்றிய வர்க்கருள் செய்திலை யேல்பழி
பற்றுமன் றோஉனை மாரியம்மா ! (41)

மக்கள்வ ருந்துவ துள்ளம்பொ றுதநன்
மாண்புடை யாய்என ஏத்துநரின்
பக்கம்இ ருந்தவர்க் கூறொன்று றுவகை
பாதுகாப் பாய்எங்கள் மாரியம்மா ! (42)

உற்றஉ டற்குறை யோடும னக்குறை
உன்னிய வர்க்கிலை உன்பெயரைக்
கற்றவர்க் கம்மையு றுதவர் இம்மையில்
காண்பது மெய்ச்சுகம் மாரியம்மா ! (43)

பேணிய நின்னடி யாரைவ ருத்துமப்
பேயும்பி சாசமும் விட்டொழியும்
காணிய போதினில் பில்லிவெஞ் சூனியம்
கட்பொறி யால்படும் மாரியம்மா ! (44)

கட்கம்பி டித்தெங்கள் பாவந்த டிந்துயிர்
காக்கும்த யாபரி நீயலவோ
மட்டில்பெ ருங்கரு ணைக்கட லாய்வந்த
மாமயி லேமுத்து மாரியம்மா ! (45)

அங்கிமி திக்குமெய்த் தூய்மைய ராமடி
யார்கள்வ லஞ்செயும் ஆலயத்துள்
சங்கம்இ ருக்குநல் தொண்டர்க்கு ழாங்கள்உன்
தண்ணருள் எய்துவர் மாரியம்மா ! (46)

எங்கள் உடல்பிணி என்னும்பா சக்கயி
றேந்துகின் றுன்றனை வீழ்த்துதற்குச்
சங்கணி யுங்கரத் தேவலம் வச்சிரம்
தாங்கிவ ரும்முத்து மாரியம்மா ! (47)

குங்குமம் தோய்திரு மேனிவி ளங்கநின்
கோயில்வி ளங்கநின் கோயிலிலே
தங்கிவி ளங்கஇவ் வையகத் தோர்தமைத்
தாங்கிவி ளங்கும்எம் மாரியம்மா ! (48)

மண்ணவ ரின்சதி தன்னில்உ ளைந்தஇம்
மைந்தனுக் குப்புகல் மற்றிலையால்
விண்ணிருந் தேவந்து வீற்றிருப் பாய்உனை
வேண்டினன் ஆதரி மாரியம்மா ! (49)

வாருல கெங்கும்இ யங்கிஉ யிர்த்தொகை
வாழிய என்றுநீ வாழ்த்திஇடத்
தூருர கம்பிணித் தாட்டும்உ டுக்கையை
உன்கரத் தேவைத்தாய் மாரியம்மா ! (50)

மாங்கலி யந்தரும் மங்கலே யேசுக
வாழ்வினுக் கோருப காரியம்மா
ஓங்குமா தானம்உ கந்தவ ளேஅன்பர்
உள்ளத்தி லேஅமர் மாரியம்மா ! (51)

இல்லங்கள் தோறும்உன் அன்பர்இ டும்பலி
ஏற்குங்க பாலம்இ டக்கையிலே
மல்குவ ணங்கொண்டு வையம்பு ரக்கின்ற
மாயம்ஈ தென்கொலோ மாரியம்மா ! (52)

மஞ்சள்பொ டித்துமுன் வட்டிலி லேவைத்து
வந்துவ ணங்குகின் றூர்எவர்க்கும்
அஞ்சல்அஞ் சேலென நீஅப யந்தர
அள்ளிக்கொ டுத்தருள் மாரியம்மா ! (53)

ஓங்குகற் பூரத்தின் சோதியி லேஅமர்
ஓங்கார மாரிஉன் பேர்உருவம்
ஈங்கடி யார்களின் கண்ணுக்கு ளேநிற்க
இன்னருள் செய்எங்கள் மாரியம்மா ! (54)

---

* சேயிவன் கச்சிந கர்க்குப்பு ஸ்வாமியின்
சிந்தையி லேகுடி கொண்டனையால்
ஆயிரங் கண்ணுடை அம்மையுன் வாக்கினை
அன்பர்க்க ளித்தனன் மாரியம்மா !

வாழிய நின்அருள் வாழிய நின்புகழ்
வாழிய நின்பெயர் மாரியம்மா !
வாழிய என்றுனை வாழ்த்திவ ணங்குநர்
வாழிய வாழிய வாழியரோ !

---

**ஸ்ரீ முத்து மாரியம்மன் தரிசனக் கண்ணிகள் முற்றுப்பெற்றன.**

## 1. கண்ணிகளில் உள்ள அரும்பதமும், உரையும்.

———:o:———

1. பேணி—விரும்பி.
2. பூவிரி—புட்பங்கள் மலர்கின்ற, பொன்னி—காவிரி.
3. பார்ப்பதி-பார்வதி, விப்பிரன்-பிராம்மணராகிய திருஞான சம்பந்தர்.
5. மேதகு—மேன்மை பொருந்திய.
6. கோமயம்—பசுஞ்சாணம், துப்புரவு—சுத்தம்
9. பணம்—படமெடுத்து ஆடும் பாம்பு.
10. களி—களிப்பு.
14. கட்கடை—கடைக்கண், உள்—மனம்.
19. கலிங்கம்—ஆடை, அஞ்சனம்—கண் மை.
23. மண்டும்—அதிகரிக்கின்ற.
24. முன்றில்—சந்நதியில்.
26. ஆறு—மார்க்கம்.
29. சென்னியில் அஞ்சலி கூப்புகின்றார்—சிரசின்மேல் கை கூப்பிக் கும்பிடுகிறார்கள்.
30. ஆர்த்து—சப்தித்து.
31. உத்திரியம்—மேலாடை.
35. ஓதனங்கள்—பொங்கல் முதலியன.
38. தக்கோலம்—வெற்றிலையுடன் சேர்த்துண்ணும் பாக்கு முதலிய வாசனைப் பொருள்கள்.
40. முண்டகம்—தாமரை, வித்தகி—ஞான சொரூபி.
42. ஊறு—இடையூறு.
43. அம்மை—வசூரி, வருபிறவி.
44. காணிய போதினில்—தரிசித்த அளவில்.
46. அங்கி—நெருப்பு.
47. சங்கணி—சங்கினால் செய்த வளைகளை அணிகின்ற.
49. உளைந்த—மனம் நொந்த.
50. வார் உலகு — பெரிய பூமண்டலம், உரகம் — பாம்பு, பிணித்து—கட்டி.
51. மங்கலை — சர்வ சௌபாக்கியங்களையும் தரும் உமையவள்.
52. பலி — விண்ணோர் உணவு, மல்குவணம் — நிறையும்படி, புரக்கின்ற — காக்கின்ற.

* சேய்—மகன்.

உ

ஸ்ரீ முத்துமாரியம்மன் துணை

மாதானம்

# ஸ்ரீ முத்து மாரியம்மன் தரிசனம்

## 2. தல வரலாறு

### 1. கடவுளின் அருவமும் உருவமும்.

பூவுலகின் உள்ளும் புறமும் சர்வ சக்தி வாய்ந்த அருவமான கடவுள் அவ்வப்போது எங்ஙனம் உருக் கொண்டு நாம் கண்டு தொழுது உய்யும்வண்ணம் கோயில் கொண்டு எழுந்தருளி பேரருள் புரிகின்ருன் என்பதை விவரிக்க வேண்டி கீழே இரண்டொரு அனுபவங்களைக் குறித்து எழுத முற்பட்டேன்.

அருவமாக உள்ள மின்சார சக்தி எங்கும் வியாபித் திருந்தபோதிலும் உலகினருக்குப் பல்லாற்ருனும் உதவ உருவங்களோடுங் கூடிய பொருள்களில் மறைந்து நின்று இயங்கி ஒளியைத் தரும் விளக்காகவும், ஒலியைத் தரும் மணியாகவும், பயன்படுவதோடு, காற்று விசிரியைச் சுழற்றவும், இயந்திரங்களை இயக்கவும், இருப்புப் பாதைத் தொடர் வண்டிகளைச் செலுத்தவும், வானெலி முதலான நவீன சாதனங்களுக்கு உடலோடு இயைந்த உயிரென இருந்து இயங்கி வரும் உண்மையை நாம் தினம் காண்கின்ருேம்.

ஆகவே கண்ணுக்குப் புலனுகாத மின்சார சக்தி கண்ணுக்குப் புலனுகும் பொருள்களோடு அமைந்த பிறகே அச் சக்தி பயனுகிறது என்பது தெய்வ நீதி. இது நாம் தினப்படி அனுபவத்தில் உணரக்கூடியது.

தெய்வ சக்தியும் மின்சார சக்தியைப்போல் அருவமானது. தெய்வ சக்தி அருவமாக இருக்கும் வரையில் நமக்குப் பயன்படுவது கூடாததாகும். அதனுல் கண்ணுக்குப் புலனுகாத தெய்வ சக்தி உருவெடுத்து வர அவசியமாகிறது.

ஈண்டு,

"விண்ணின் றிழிந்து வினைக்கீடாய் மெய்கொண்டு
தண்ணின்ற தாளைத் தலைக்காவல் முன்வைத்து
உண்ணின் றுருக்கியொ ரொப்பிலா ஆனந்தக்
கண்ணின்று காட்டிக் களிம்பறுத் தானே."

என்னும் திருமூலநாயனுர் அவர்களின் திருமந்திரத்தினுள் அடங்கிய ஆழ்ந்த பொருள் ஊன்றி உணரத்தக்கது.

இங்ஙனம் கண்ணுக்குப் புலனுகாத பரம்பொருளைத் 'தெய்வம்' என்றும், 'தெய்வ சக்தி' என்றும் இரு கூறுகளாகக் கொள்கிறேம். தெய்வமும் சக்தியும் ஒன்றுபட்டால்தான் இயங்க ஏதுவாகிறது. சர்வேஸ்வரன் ஒருவன் ஆகில் சர்வேஸ்வரி என்னும் சக்தியின் கூறும் ஒன்றே ஆகிறது. சர்வேஸ்வரன் முக்கூறுகளாக, அதாவது பிரமன், விஷ்ணு, உருத்திரன் என்று தொழிலின் அடிப்படையில் பகுப்போம் ஆனல் சர்வேஸ்வரியை, முறையே சரஸ்வதி, இலக்குமி, துர்க்கை என்று அதே தொழில் அடிப்படையில் பகுத்துரைக்கின்றேம். இங்ஙனம் தேவர்களும், அவர்களின் தேவிமார்களும் தொழில்படுங்கால். தெய்வமும், தெய்வ சக்தியும் ஆக உருக்கொள வேண்டி வருகிறது.

தெய்வ சக்தியை முக்கூறுகளாகக் கொள்வது ஒரு சந்தர்ப்பம்போல், சக்தியை ஒன்பதாகக் கொள்வதும் ஒரு அவசியம். இந்த அவசியம் யாதெனில் மக்களுக்கு அந்தந்த உருவத்தில் தெய்வ சக்தி அருள் புரிய வேண்டியே.

அருவமாக உள்ள தெய்வத்தையோ தெய்வ சக்தியையோ வழிபடவும், துதிக்கவும் நம்போன்ருருக்கு இயலாது. ஆதலால், நாம் பெற்ற இப்பிறவியைப் பயன் படுத்தாமல் வீணுக்கக் கூடுமே என்ற அருள் நோக்கே கடவுளுக்கு அதிகமாதலால், உருவுடைய தெய்வங்களாகவும் உருவுடைய தெய்வப் பிறவிகளாகவும், அத்தகைய உருவங்களில் ஆணுகவும், பெண்ணுகவும் உற்பவிக்கின்ருன் அந்த அருவக் கடவுள்.

பிரமன், விஷ்ணு, உருத்திரன், ஹரிஹரன், அய்யனர், முருகன், கணபதி போன்ற ஆண் தெய்வங்களும், சரஸ்வதி இலக்குமி, துர்க்கை, நவசக்திகள் போன்ற பெண் தெய்வங்களும், இராமன், கிருஷ்ணன், புத்தர், வள்ளலார், ஏசுநாதர், முகம்மது போன்ற ஆண் அவதார புருஷர்களும், ஆண்டாளைப் போன்ற பெண் அவதாரங்களும் நாம் அறிந்தது. ஆண், பெண் என்ற இரண்டுமில்லாமல் ஓர் உருவத்திலேயே இரண்டும் ஒன்ருக விளங்கும் அர்த்தநாரீஸ்வரராகவும் உருவெடுக்கும் கருணையை என்னென்று சொல்வது !

உருவத் தெய்வங்களையும் உருவத் தெய்வப் பிறவிகளையும் நாம் ஒருமிக்க மதித்து வழிபடுகிறோம். ஏனெனில், தெய்வப் பிறவிகளுக்கும் தெய்வங்களுக்கும் ஒத்த சக்தியே இருக்கக் காண்கிறோம்.

முருகனின் அவதார விசேடத்தை விளக்கும்,

"அருவமும் உருவமாகி
** ** **
ஒருதிரு முருகன் வந்து
உதித்தனன் உலகம் உய்ய."

என்னும் வாக்கு இதன்முன் சொல்லிவந்த தெய்வநீதியை மேலும் வற்புறுத்துவதாகும்.

இங்ஙனம் மக்கள் உய்யவேண்டி கடவுள் எடுத்த உருவங்கள் பல. கோயில் கொண்டுள்ள தலங்கள் பல. உருவெடுத்து வந்த காரணம் பல, கடவுள் உருவநிலை அடையும் காலத்தைப் பற்றியும், அதற்கான அவசியத்தைப் பற்றியும் யார்தான் உணர்ந்தறிய முடியும்?

**"கோயில் இல்லா ஊரில் குடி இருக்க வேண்டாம்"** என்ற அறிவுரையின் அவசியம் யாதெனில் தெய்வ வழிபாடு இன்றி எந்த மானிடனும் இருத்தல் தவறு என்று கொள்வதே.

இப்படி கடவுள் பல உருவங்களோடு ஆங்காங்கு கோயில்கொண்டு எழுந்தருளி இருக்கிறன். பல உருவங்களோடும், பல பெயர்களோடும் உள்ளான். பசித்த காலத்தில் விருப்பத்துக்கொப்ப உணவு உண்ணவேண்டி ஒரே உணவு தானியம், பல சுவையினதாகத் தயாரிக்கப்பட்டு உண்ணப்படுவதுபோல், எடுத்த பிறவி உய்ய வேண்டி நம் விருப்பத்துக் கேற்ப கடவுள் உருவத்தை வணங்கி ஆராதிக்கவே இங்ஙனம் கடவுள் பல உருவங்களெடுக்கிறன்.

இவ்வளவு கருணைகொண்டு உருவம் பல எடுத்து மக்களுக்கு எளிதில் துணைபுரியச்சித்தமாக இருக்கையில் நாம் பயன் அடையாவிட்டால் அது அறியாமை யாகும்.

இங்ஙனம் மக்கள் உய்யும் வண்ணம் கடவுள் எடுத்துள்ள உருவங்களில் மாரியம்மன் உருவம் ஒன்றாகும். மாரியம்மனுக்குப் பல தலங்கள் விசேடமானவை. அதில் முதன்மையானது சமயபுரம் என்றும், கண்ணனூர் என்றும் வழங்கும் பதியே. தஞ்சைக்கு அடுத்துள்ள "மாரியம்மன் கோயில்" என்றே விசேடமான பெயருடன் விளங்குவது அடுத்தது. மாயூரம் தாலூகாவில் ஒழுகமங்கலம் என்னும் பதியும் மாரியம்மனுக்கு விசேடமானது.

மேலே குறிப்பிட்டுள்ள தலங்களுக்கு ஒப்பப் பெருமை வாய்ந்தது இந்நூலில் விவரித்துள்ள மாதானம் மாரியம்மன்கோயில்.

## 2. ஸ்ரீ முத்து மாரியம்மனைப்பற்றிய புராண வரலாறு.

இரேணுகா தேவியார் இரேணுகையின் புத்திரி ஆவார்கள். இவர்கள் ஜமதக்கினி இருடியின் பத்தினி. ஜமதக்கினி முனிவர் கார்த்த வீரியனின் புத்திரரால் இறக்க இரேணுகாதேவி உடன் தீப்புகுந்தார்கள். இவர்களது தேகம் வேகுமுன் இந்திரன் வருணனைக்கொண்டு மழை பொழிவித்துத் தீயைத் தணிவித்தனன். இருப்பினும் தீயினுல், இரேணுகாதேவியின் திருமேனியில் தீக்கொப்புளங்கள் உண்டாகி, உடுத்திருந்த சீலையும் முற்றும் எரிந்துவிட்டது. இங்ஙனம் திருமேனி முழுதும் தீக் கொப்புளங்கள் அரும்பிய வண்ணமும், சீலையை இழந்து நிர்வாணமாயும் மக்கள் கண்ணில் பட வெட்கி எழுந்த இரேணுகா தேவியார் அவ்வனத்திலிருந்த வேம்பின் தழைகளை ஆடையாகத் தரித்துக்கொண்டு அருகிருந்த புலைச் சேரியை அடைந்தனர்கள்.

பசியால் வருந்திய அவர்கள் உணவு ஏதேனு மிருப்பின் கொடுத்து உதவுமாறு வேண்டினுர்கள். அப் புலைச் சேரியினர் அவ்வம்மையாரைக் கண்டு ''இவர்கள் யாரோ வேதியப் பெண்போலும்!'' என்று எண்ணித் தங்கள் ஆகாரப் பொருள்களை அவ்வம்மையாருக்குக் கொடுக்க அஞ்சி, பச்சரிசி—மா, வெல்லம், இளநீர், பானகம் முதலியன தந்து உபசரித்தனர். பசி நீங்கிய அம்மையார் அச்சேரியினின்று விலகி வண்ணூர் இல்லஞ் சென்று, அங்கு கொடுத்த சீலையைப் பெற்று, தரித்துக்கொண்டு ஜமதக்கினி இருடியிடம் வந்து துயர் உறும்போது தேவர்கள் தரிசனம் தந்து துயரமாற்றினுர்கள்.

அது சமயம் சிவமூர்த்தி இரேணுகா தேவியார் முன் தோன்றி இங்ஙனம் அருளினர்.

**"நீ சத்தியின் அம்சமாதலால் நீ பூமியிலேயே இருந்து, கிராமத்தில் உண்டாகும் தீமைகளைத் தவிர்த் தருளாய்! நீ கொண்ட தீக் கொப்புளம் உலக மக்களுக்கு அம்மைக் கொப்புளங்களாகும்! அதனால் உண்டாகும் துன்பம் தணிய நீ தரித்த ஆடையாகிய வேப்பிலையே அதற்குரிய மருந்தாகும்! நீ புசித்த பச்சரிசி—மா, வெல்லம், இளநீர் உனக்குரிய நிவேதனம் ஆகுக! உன்னை ஆராதிப்போர்களின் தீமையை விலக்கி அருளுவாய்! உன்னை ஆராதியோதாரை வருத்தி; அவர்கள் உன்னை ஆராதிக்கும்படி ஆட்கொள்வாயாக!"**

இவ்வருள் மொழிகளை அவ்வம்மையாருக்கு உரைத்து மறைந்தனர்.

தீயினால் கொப்புளங்கள் அரும்பி முத்துக்கள் உண்டான திருமேனியுடன், வருணன் பெய்த மாரியினால் தீ அணைந்து, அத் தீயினின்றும் வெளிப்போந்ததால் இரேணுகா தேவியார் முத்து மாரியம்மனெனப் பெயர் பெற்று கிராம தேவதை யானார்கள். இது நிகழ்ந்தது முதல் யுக பிற்பாதி என்னலாம்.

1. வாமை, 2. ஜேஷ்டை, 3. ரௌத்ரி, 4. காளி. 5. கலவிகரணி, 6. பலவிகரணி, 7. பலப் பிரமதனி, 8. சர்வ பூத தமனி, 9. மனோன்மனி என்ற நவசக்திகளுள் ஒன்றாகிய ரௌத்ரியின் அம்சமாகும் முத்து மாரியம்மன். அதாவது அக்னி ரூபியாக அவதரித்தவள் ஆகும். அவதார விசேடத்துக் கொப்ப அம்மனுக்கு அக்னி கேசம் அமைந்துள்ளது. எனவே இவ்வரலாற்றிலிருந்து ஸ்ரீ முத்து மாரியம்மன் பராசக்தியின் அம்சம் என்பது நன்கு உணரற்பாலது.

## 3. தலத்தின் இருப்பிடமும் பெயர் வந்த வாறும்.

மாதானம் என்பது தலப் பெயர். இது தஞ்சாவூர் மாவட்டம் சீகாழி வட்டாரத்தில் உள்ளது. மாதானம் என்பதற்குப் பெரிய தானம் என்று பொருள். இப் பெயர் வந்த வரலாறு கீழே குறிப்பிடப்படுகிறது.

இற்றைக்குச் சுமார் 250 ஆண்டுகளுக்கு முன்முதல் இப்பகுதியில் "வடகால் துரை" என்ற குடும்பத்தினர் இருந்து வருகிறார்கள். இவர்கள் குதிரை ஏறிச் சவாரி செய்யும் மகா வீரர்களாக இருந்தமையின் 'ராவுத்த மிண்டர்' என்ற அடைமொழி பெற்றுப் புகழோடு வாழ்ந்துவருகிறார்கள். இக்குடும்பத்தின் பெரியோராகிய அழகிய சிதம்பர ராவுத்தமிண்ட நாயனர் என்பவர்கள் சென்ற 250 ஆண்டுகளுக்குமுன் மாதானம் என்று வழங்கும் இவ்வூரை வித்வான்கள், தீட்சிதர்கள், புரோகிதர்கள் போன்ற கல்வி கேள்வி சாத்திர வல்லமை பொருந்திய பிராம்மணோத்தமர்களுக்கு மகா தானமாக, அதாவது பெரிய தானமாகக் கொடுத்தனர்கள் என்றும், இக் காரணம் பற்றி இப் பதிக்கு மாதானம் என்ற பெயர் போந்ததென்றும் வடகால் துரை குடும்பத்தாரிடமுள்ள செப்பேட்டிலிருந்து தெரியவருகிறது. தஞ்சை மன்னரால் தானமாகக் கொடுக்கப்பட்ட கிராமம் என்று சிலர் சொல்லுவதற்கு ஆதாரம் ஒன்றும் கிடைக்கவில்லை. 'ராவுத்த மிண்டர்' குடும்பத்தினர் தஞ்சை மன்னரிடம் பணியாற்றி நிலம் வழங்கப்பட்டதாகவும் தகவல் யாதொன்றும் கிடைக்கவில்லை.

சீகாழியிலிருந்து திருமுல்லைவாயிலுக்குச் செல்லும் பெருஞ் சாலையில் 2½-கல் சென்று, பிறகு கிளைச் சாலையில் வடக்கே 3½-கல் சென்றால் இத் தலத்தை அடையலாம். திருமயிலாடியிலிருந்து கிழக்கே 3-கல் சென்றாலும் இப்பதியை அடையலாம். நான்கு பக்கங்களிலிருந்தும்

இப்பதியை அடைய வசதியுண்டு. இப்பதியில் எழுந்தருளி இருப்பது ஸ்ரீ முத்து மாரியம்மன்.

## 4. தல மூர்த்திகளின் வரலாறு.

இப்பதியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ முத்துமாரியம்மன் முதல்முதலில் எக்காலத்தில் எப்படி வந்தனள் என்பது பற்றி நிச்சயமாகச் சொல்லக் கூடிய ஆதாரம் ஒன்றும் இல்லை. இக் கிராமத்திலுள்ள முதியோர் சொல்லும் வரலாறே கிடைக்கக்கூடிய வரலாருக உள்ளது.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலில் மாரியம்மன் உருவங்கள் இரண்டு உள்ளன. முதலாவதாகச் சிறிது பின்னமான மாரியம்மன் சிலையைப் பற்றிய வரலாறு விவரிக்கப்படுகிறது.

இம் மாரியம்மன் சுமார் இருநூறு ஆண்டுகளுக்கு முற்பட்டதாகச் சொல்லப்படுகிறது. இவ் வம்மையின் வரலாறு ஒரு அற்புதம். அதுயாதெனில்:—ஒரு வணிகன் நாட்டுச் செக்குமரம் செப்பனிடவேண்டி புளியமரத்தின் பருத்த அடிப் பாகத்தை இவ் வூருக்குத் தருவித்தான். அஃது ஓர் இடத்தில் கிடந்தது. கிடந்த காலத்தில் ஓர் இரவு அவ்வன்பரின் கனவில் தோன்றி மாரியம்மன் தனக்கு அம்மரம் தேவை என்றும் அம்மரத்தை அதனுல் வணிகன் எடுத்துக்கொள்ளக் கூடாதென்றும் உத்தரவு பிறப்பித்தாள். அதிசயக் கனவு கண்டவர் காலையில் எழுந்து பக்திபரவசராகப் புளிய மரத் துண்டு கிடந்த இடத்தைச் சார்ந்து பார்க்க வேர் அற்றதாகக் கிடந்த அம் மரம் துளிர்த்திருந்தது கண்டு திகைத்து "மாரியம்மனின் அருள் எத்தன்மைத்து!" என்று வியந்து அம் மரத் துண்டுக்கு வேர் உண்டாகி இருக்கிறதோ என்று ஆராய்ந் தறியும் பேரவா கொண்டு அதற்கான மண்வெட்டி முதலியன கொண்டு மண்ணைப் பறித்துச் சோதிப்பாராயினர்.

இப்படிச் சோதிக்கையில் மரத்தின் கீழ் மண்ணில் மறைந்திருந்தது மாரியம்மன் கற்சிலை. இம் மாரியம்மன் சிலையே மேலே கண்டவாறு பின்னமடைந் துள்ளதாகும். இச் சிலையில் இடது அத்தமும் இடது தனமும் சிறிது பின்னப்பட்டுள்ளன. இம் மாரியம்மன் சிலை கோயிலில் மூலத்தானத்துக்குச் செல்லும் வாயிலுக்கு வெளியே, வடக்கில் ஒரு மேடையின் மேல் பிரதிட்டை செய்யப்பட்டுள்ளது. இம் மாரியம்மனுக்கும் நித்தியபடி பூசை முதலியன உண்டு.

இரண்டாவதாக, கோயில் மூலத்தானத்தில் உள்ள மாரியம்மன் கற்சிலையைப் பற்றிக் கிடைத்துள்ள வரலாறு யாதென்று தெரிந்து கொள்வோம்.

மற்றொரு காலத்தில் ஓரன்பரின் கனவில் அவ்வூர் பிரப்பங் காட்டில் மாரியம்மன் சிலை இருப்பதாக மாரியம்மன் தோன்றி அறிவிக்க அவ்வன்பர் திடுக்கிட்டெழுந்து ஊர்ப் பெருமக்களுக்குத் தெரிவித்தனர். கனவின் உண்மையைச் சோதித்தறிய துடி துடித்து, காட்டை அழித்துச் சிலையைக் கண்டெடுத்தனர்.

இவ்விரு சிலைகளின் ஒற்றுமையும் வித்தியாசமும் பற்றி அன்பர்கள் அறிந்து கொள்வது அவசியமாகாது. ஆகையால் அதைப் பற்றி இவ்வரலாற்றில் எழுத வேண்டியதில்லை எனக் கருதி விடப்பட்டுள்ளது. இருப்பினும் இக்கோயிலில் ஸ்ரீ மாரியம்மனின் இரு சிலைகளையும் மாரியம்மனின் ஒரு சக்தியின் வடிவமாகவே கொண்டாடி வருகிறார்கள்.

இவ்விரு சிலைகளையும் கண்டெடுத்ததன்முன் இப்பதியில் மாரியம்மன் கோயில் இருந்திருக்க வேண்டும் என்று ஊர்ப் பெருமக்கள் சொல்லும் விவரங்களிலிருந்து யூகிக்க வேண்டி இருக்கிறது.

## 5. திருப்பணியும் திரு ஆபரணமும்.

ஸ்ரீ முத்து மாரியம்மனுக்கு முதல் முதலில் எப்போது கோயில் திருப்பணி நடந்தது என்று தெரிய வில்லை. பிறகு எந்தெந்தக் காலங்களில் கோயில் கட்டிடம் எப்படி விஸ்தரிக்கப் பட்டதென்றும் நிச்சயமாகச் சொல்வதற்கு ஆதாரங் கிடைக்கவில்லை. இருப்பினும் 1875ம் ஆண்டில் இக் கோயிலை நிர்வாகம் செய்துவரும் குடும்பத்தினரில் ஒருவரான தர்மகர்த்தா திருமதி, மங்கத்தாயாள் அம்மை யாரால் திரு ஆபரணங்கள் ஸ்ரீ முத்து மாரியம்மனுக்குச் செய்யப்பட்டுள்ளன என்றும், பிறகு, 1907-ம் ஆண்டில் இக் குடும்ப தர்மகர்த்தா திரு. குமரஸ்வாமிராவுத்தமிண்ட நாயனர் அவர்களால் கோயில் திருப்பணி செய்யப்பட்டு கும்பாபிஷேகம் ஆகி இருக்கிறதென்றும் தெரிய வரு கிறது. கடைசியாக 1950-ம் ஆண்டில் இக் குடும்ப தர்மகர்த்தா திரு. K. சச்சிதானந்த ராவுத்தமிண்டநாயனர் என்கிற சின்னசாமி துரை அவர்களால் திருப்பணியாகி கும்பாபிஷேகம் செய்யப்பட்டுள்ளது என்பதாக இக் குடும்பத்தினர் கொடுத்துள்ள தகவலிலிருந்து தெரிய வருகிறது.

ஸ்ரீ முத்து மாரியம்மனுக்கு மிகப் பொருத்தமான வெள்ளிக் கவசம் செய்து வைத்துள்ளார்கள்.

ஸ்ரீ முத்து மாரியம்மனுக்கு சிங்கம், குதிரை, அன்ன வாஹனங்கள் செய்யப்பட்டுள்ளன. விநாயகருக்கு மூடிகவாகனமும் செய்யப்பட்டுள்ளது. மற்றும் அம்மன் வீதி உலாவுக்குத் தேவையான மஞ்சம், திருவாச்சி முத லியனவும் உள்ளன. இக்கோயிலில் நல்ல நாதத்தோடும் கூடிய கண்டாமணி ஒன்றும் செய்யப்பட்டுள்ளது.

## 6. கோயிலின் அமைப்பு.

ஆலய அமைப்பைக் காட்டும் படம் வரைந்து இவ்வர லாற்றுடன் சேர்ப்பது விரைவில் முடியாததால், அன்பர்

களின் மனக்கண்ணின் முன் கோயில் தோற்றத்தைக் காட்டும் முயற்சியுடன் கோயிலின் அமைப்பு கீழே விவரிக்கப் படுகிறது.

கோயில் கிழக்குப் பார்த்தது. நான்கு பக்கங்களிலும் மதிற் சுவர் உண்டு. கோயிலின் அளவு கிழக்கு மேற்கில் 129 அடி. வடக்கு தெற்கில் 72 அடி. வெளியில் இராஜ கோபுரம் கிடையாது. வெளியே இருந்து உள்ளே பிரவேசித்ததும், இரும்புத் தூண்கள் நிறுத்தி இரும்புத் தகடு வேய்ந்த பெரியதொரு கொட்டகை அமைக்கப்பட்டுள்ளது. இதை ஒட்டி மேற்கில் மகா மண்டபம் அமைந்திருக்கிறது. இம்மண்டபத்தின் முகப்பில் தலைக்கு மேல் ஸ்ரீ மாரியம்மனின் சுதை உருவம் செய்யப்பட்டுள்ளது.

இம்மாரியம்மன் உருவம் பின்னமடைந்துள்ள மாரியம்மன் உருவத்துக்கு அநேகமாக ஒத்துள்ளது. இந்த அம்மனின் இருமருங்கிலும் சேடியர் சாமரை வீசிய வண்ணம் பணி செய்து நின்றுள்ளனர். அம்மனின் வலப்புறம் விநாயகர் சுதை உருவம் விநயமாக நிற்கிறது. இடது புறம் பாலசுப்ரமணியர் மயிலுடன் ஒயிலாக நின்றுள்ளார். அம் மயிலுக்குச் சற்றும் அஞ்சாது பக்கத்தில் நாகம் ஒன்று சிரமெடுத்து ஆடிய வண்ணம் காட்சியளிக்கிறது. அம்மனுக்கு நிழல் தர இரும்புத் தகட்டுக் கொட்டகை அமைந்திருந்தும், தன் கடமையில் சற்றும் தவறுததோர் ஐந்து தலை நாகம் அம்மனுக்கு நிழல் தந்து கொண்டே இருக்கிறது. அம்மனுக்கெதிரில் உடைத்து வைத்த நாரி கேளமும், வாழைப்பழச் சீப்பும் ஒரு தட்டு நிறைய உள்ளன.

வாழைப் பழத்தை அச் சீப்பிலிருந்தபடி சற்று கொய்து உண்டதுபோல் சிற்சில வாழைப்பழங்கள் காண்கின்றன. இது பழுதடைந்ததால் உண்டான அடையா

ளமா அல்லது சுதை வேலைக்காரனின் வேலைப்பாடா என்று தெரியவில்லை. மொத்தத்தில் சுதை வேலை மிக அழகுற அமைந்துள்ளது.

இந்த அழகு உருவம் உள்ளே உள்ள ஸ்ரீ முத்துமாரியம்மனின் உருவம் என்ன கண்கொள்ளாக் காட்சி அளிக்குமோ என்ற ஆவலைத் தூண்டுகின்றதாகையால் பரபரப்புடன் மஹா மண்டபத்தினுள் சென்று பார்ப்போமானல், இடையில் அர்த்த மண்டப வாயில் தெரிகிறது. வாயிலுக்கு வெளிப்புறம், தெற்கில் மேடைமேல் விநாயகர் கற்சிலை உள்ளது. இடம்புரி விநாயகர். வாயிலின் வடபுறம் பின்னப்பட்டுள்ளதாக முன்குறிப்பிட்டுள்ள மாரியம்மன் கற்சிலை மேடை மேல் பிரதிஷ்டை செய்யப்பட்டுள்ளது. அர்த்த மண்டபத்தினுள் வடக்குப் பக்கத்தில் விநாயகர், ஆரியமாலை, ஓந்தாயி சமேத மதுரை வீரன், பச்சையம்மன், பேச்சி ஆயி இவர்களின் உற்சவ விக்ரகங்கள் உள்ளன. பச்சையம்மனுக்கு மாத்திரம் இவ்வூரில் கற்சிலை உள்ள மூலத்தானம் இருப்பதாகத் தெரியவில்லை. இதைப்பற்றிய வரலாறு சற்று விரிவாகக் கீழே குறிப்பிடப்படுகிறது.

அர்த்த மண்டபத்தின் அடுத்த பாகம் மேற்கில் கர்ப்பக் கிருஹம். இந்த மூலத்தானத்தில் காட்சி அளிப்பதே ஸ்ரீ முத்து மாரியம்மன் ஆகும். இக்கர்ப்பக்கிருகத்துக்கு மகுடம்போல் விமானம் அமைந்துள்ளது.

இக்கோயிலுக்கு உள்ளது ஒரு பிரகாரம் தான். கோயில் பெரும்பாலும் செங்கல் திருப்பணி என்றே சொல்ல வேண்டும். மகா மண்டபம், அர்த்த மண்டபம் இவ்விரண்டின் மேல் தளம் செங்கல் சுண்ணும்பால் இரு சிறு வளைவுகள் உச்சியில் ஒன்று சேர்ந்தனபோல் ஒட்டப்பட்டுள்ளன. இத்தகைய ஒட்டு வேலை சோழ மன்னரின் கோயில் திருப்பணியில் அநேக இடங்களில் காணலாம்.

கோயிலின் தென் மேற்கு மூலையில் பிரகாரத்தில் விநாய கருக்குச் சிறு தளி ஏற்பட்டுள்ளது. பிரகாரத்தில் வேறு சுற்றுக் கோயில் கிடையாது. கோயிலின் பின்புற மதிலை ஒட்டி உள்புறம் யாத்ரிகர்கள் தங்குவதற்கான ஓட்டுக் கட்டிடம் ஒன்று விசாலமாக அமைந்திருக்கிறது. இக் கட்டிடம் இப்போது பழுது பார்க்கப்பட்டு வருகிறது. கோயில் வடக்கு பிரகாரத்தில் ஒரு கல் கேணி இருக் கிறது. இக் கேணியிலிருந்து எடுக்கப்படும் தீர்த்தமே மாரியம்மனுக்குத் தினப்படி அபிஷேகத்துக்குப் பயனு வது. பிரகாரம் செங்கல் தளவரிசை போட்டது. கோயில் பிரகாரத்தில் வடகிழக்கு மூலையில் வாகன மேடையும் கோயில் அலுவலகமும் அமைந்துள்ளன. பிரகாரத்தின் தென் கிழக்கு மூலையில் மடப்பள்ளி அறை அமைந் துள்ளது. சந்நதிக்கு எதிரில் சாத்திரப்படி பலிபீடம் அமைந்து உள்ளது. கோயில் கட்டிடத்தில் தெய்வ மணங் கமழ்கிறது.

கோயிலின் முன் தோற்றப் புகைப்படம் இப் புத்தக மேல் அட்டையின் பின்புறம் அச்சிடப்பட்டுள்ளது.

## 7. மூலத்தான அம்மையின் திரு உருவம்.

அம்மன் சுமார் இரண்டடி உயரமுள்ளது. இவ்வுரு வம் நவசக்தியில் ஒன்ருகிய வீர சக்தி என்னும் பெயரி னுக்குத் தக்கவாறு இராஜ கிரீடம் தரித்து வலது கரங் களில் கட்கமும், வச்சிராயுதமும் தாங்கி, இடது கரங் களில் கபாலமும், தமருகமும் பிடித்து நான்கு புயங்க ளுடன், இடது காலை மடித்து வலது காலை தொங்கவிட்டு, திருப்பாதத்தைப் பதுமத்தின் மேல் வைத்து, கிழக்குப் பார்க்க எழுந்தருளியுள்ளாள். முகமண்டலம் சாந்தமுடை யதாக உள்ளது. இடையில் ஆடை அணியும் வசதியோடு சிற்பவேலை அமைந்துள்ளது. இங்கு அம்மையின் அலங் காரத்தைப் பற்றியும் சிறிது விளக்க வேண்டி உள்ளது.

அம்மனுக்கு அபிடேகஞ்செய்து, பட்டுடையுடுத்தி, அலங்கரித்து, கவசம், புட்பஞ்சாத்தி, நிவேதனம் கொடுத்து, தீபம், கற்பூரம் இவைகளின் சோதியில் அம்மனைத் தரிசிப்பது அன்பர்களுக்குப் பரவசமளிக்க வல்லது. தீபாராதனை நேரத்தில் கண்டா மணியின் ஒலி 'அம்மே,' 'அம்மே,' என்று மாரியம்மனை அழைத்து, கருணை அளிக்க வேண்டுமென ஓலமிடுவதாகத் தோன்றுகிறது.

அம்மனுக்குத் தினப்படி ஒருகால பூசை நடந்து வருகின்றது. ஞாயிறு, செவ்வாய், வெள்ளிக் கிழமைகவில் அம்மன் தரிசனம் விசேடமானது. இக் கிழமைகளில் அன்பர்கள் வெளியூர்களிலிருந்தும் வந்து அம்மனைத் தரிசித்துப் பயன் அடைகிறார்கள்.

## 8 கோயில் உற்சவங்கள்.

இக்கோயிலில் தீமிதி அதிக முக்கியம் வாய்ந்தது. இது பிரதி ஆண்டு ஆடிமாதம் கடை வெள்ளியன்று நிகழ்வது. அன்று பிரம்மோற்சவத்தின்-பத்தாம்நாள் உற்சவமாகும். இதற்கு ஏற்ப உற்சவம் ஆரம்பமாகிறது. உற்சவத்தின் முதல் நாள் காப்புக் கட்டி 10-ம் நாள் முடிவில் காப்பு அவிழ்ப்பது வழக்கம். உற்சவங்கள் கோயிலார் செலவிலும், பிற அன்பர்கள் செலவிலும் நடந்து வருகின்றன. உற்சவத்தில் தினம் காலை அபிடேகம் ஆராதனை விசேடமாக நடக்கிறது. இரண்டு வேளையும் அம்மன் வீதி உலா தக்க மேளக்கச்சேரியுடன் காட்சி அளிக்கிறாள். கோயிலில் உள்ள வாகனங்களிலும், மற்றும் வெளியே யிருந்து தருவிக்கக் கூடிய வாகனங்களிலும் பிரத்தியேகமாகத் தயார் செய்யப்படும் தேர், சப்பரம், விமானம், பல்லக்கு இவைகளிலும் அம்மனை ஆரோகணித்து ஊர்வலம் செய்விக்கின்றனர். 10-ம் நாள் திருவிழா தீமிதியுடன் முடிகிறது, அன்று இரவு அம்மன் வெகு நேர்த்தியாக அலங்கரிக்கப்படும் புட்பப்பல்லக்கில்

உலாச் செல்வாள். இந்தக் காட்சி அன்பர்களின் உள்ளத்தைக் கவர்க்கூடியது. இதை அடுத்து 11-ம் நாள் மஞ்சள் விளையாட்டும், 12-ம் நாள் விடாயாத்தியும், 13-ம் நாள் ஊஞ்சலும் நடக்கும் உற்சவங்களாகும்.

இப்பிரம்மோற்சவம் அல்லாமல் நவராத்திரி உற்சவமும், விஜய தசமியில் அம்பு போடும் உற்சவமும் அம்மனுக்கு நடந்து வருகின்றன. அம்பு போடும் உற்சவத்தில் அம்மன் குதிரையின் மேல்போந்து அன்பர்களுக்குக் காட்சி அளிக்கிருள். நவராத்திரியில் அம்மன் பல கோலமாக அலங்காரம் செய்து கொள்கிருள்.

உற்சவங்களில் அம்மனுக்கு அலங்காரம் பலவாறு என்று மேலே குறிப்பிட்டுள்ளது அல்லவா! அதில் சில விவரிக்கத்தக்கன. ஒரு நாள் மகிடாசுர மர்த்தனி போன்றும், ஒரு நாள் வீணையை ஏந்தும் கலைவாணி போன்றும், மற்ருெரு நாள் குழல் ஊதும் கிருஷ்ணனைப் போலவும், இன்னுமொரு நாள் முருகனைப் போன்றும் இவையல்லால் சாயக் கொண்டையுடன் விளங்கும் மீனுட்சி போலவும் முக்கியமான அலங்காரங்கள் செய்யப் படுகின்றன.

அப் பரம் பொருளை எப்படி அலங்கரித்துக் கண்டு தரிசித்தாலும் உள்ளம் நிறையாத ஆரா அமுதம் அல்லவா அது!

ஸ்ரீமுத்து மாரியம்மன் உற்சவத்தில் விநாயகருக்கும் புறப்பாடு உண்டு. அவருக்குள்ள வாகனத்தில் அவர் உலா வருகிருர்.

ஸ்ரீ பச்சையம்மனுக்கு மூல விக்ரகம் இல்லை என்று முன்னே குறிப்பிட்டுள்ளது. இது போல் அம்மனுக்கு வருடாந்திர உற்சவமும் இல்லை, ஆனுல் எந்தக் கிராமத்திலாவது தொத்து நோய்கள் மிகுமாயின் அக்கிராம

வாசிகள் இந்த மாரியம்மன் கோயிலில் உள்ள பச்சையம்மனுக்கு விசேட உற்சவம் செய்வித்து நன்மை அடைவது வழக்கத்தில் உள்ளது.

## 9. கோயிலுக்குள்ள நிலம்.

இக்கோயில் "வடகால் துரை" என்று பெயரிய குடும்பத்தார்களின் சொந்த கோயிலாக உள்ளது, சுமார் 150 ஆண்டுகளுக்குமுன் இக் கோயிலுக்குத் தஞ்சை மன்னரால் அளிக்கப்பட்ட சொற்ப நிலமிருக்கிறது. அதன் வருவாய் கோயிலின் தினப்படி பூசை நைவேத்தியத்துக்குப் போதுமானதாக இல்லை. இருப்பினும் இக்கோயிலின் நிர்வாகஸ்தர்கள் தங்கள் பொருட் செல்வத்தை இக் கோயிலின் நிர்வாகத்தை முன்னிட்டும் அம்மனின் அருட் செல்வத்தை அனுபவிக்க வேண்டுமென்ற உயரிய எண்ணத்தாலும் அம்மனுக்காகச் செலவு செய்து வருகிறார்கள்.

இக் கோயிலின் பராமரிப்பு, நிர்வாகம் இவைகளில் அதிக முக்கிய பொறுப்பு வாய்ந்த இக் குடும்பத்தில் 1920-ம் ஆண்டில் இக் கோயிலின் தர்ம கர்த்தாவாக இருந்த திரு. நடராஜராவுத்தமிண்ட நாயனர் கோயிலுக்கு நஞ்சை நிலங்கள் பட்டா செய்து வைத்துள்ளார்களென்று இக்குடும்பத்தார்கள் சொல்லத் தெரிகிறது.

## 10. அம்மையின் அருட் சக்தி.

"வெட்டிய மரத்தைத் துளிர்க்க வைக்கும் வீரசக்தி மாரியம்மன்" என்றெல்லாம் பலவாருகப் புகழ்ந்து போற்றப் படுகிறது. இம்மாரியம்மனின் சக்திப் பிரபாவத்தைப் பற்றி உலவிவரும் கர்ண பரம்பரையானதோர் அற்புத வரலாறும் உண்டு. அது யாதெனில்—

இக்கோயிலின் உபயோகத்துக்காக விடப்பட்டிருந்த தேங்காய்களை ஒரு வியாபாரி பறிக்க முயலுகையில், 'அவைகளைப் பறிக்கலாகாது, அவைகள் மாரியம்மனுக்காக ஏற்பட்டவை, என்று ஊரார் சொல்லக் கேட்டு,

அவ்வியாபாரி மிக அலட்சியமாக " மாரியம்மன்கோயில் மரம் என்ருல் அம்மரத்துக் காய்களுக்குக் கொம்பா முளைத் திருக்கும் " என்று சொல்லி விட்டுக் காய்களைப் பறிக்க முற்பட்டான். அங்ஙனம் செய்கையில் அக் கோயில் மரத் துக் காய்கள் அனைத்திலும் கொம்புகள் முளைத்திருக்கக் கண்டான் அந்த வியாபாரி. இவ் வற்புதத்தைக் கண்ட வன் நடு நடுங்கி, பயந்தும் வியந்தும் அத் தென்னை மரத்துக் காய்களைப் பறிப்பதினின்றும் அகன்று, அம்ம னின் சக்தியால் நிகழ்ந்த இந்த அற்புதத்தைப் பற்றி எண்ணி எண்ணிப் பரவசமாகித் தான் கண்டதை உல குக்கு அறிவித்துப் போந்தான்.

சுமார் 20 ஆண்டுகளுக்குள் நிகழ்ந்த அதிசயமும் ஒன்றுண்டு.

கொல்லையில் உள்ள மரத்தில் ஒன்றில் தேங்காயைப் பறித்து அதைத் தன் சந்நதியில் சாத்தும்படி மரத்துக் குடையவரின் கனவில் மாரியம்மன் தோன்றி உத்தர விட்டாள். உத்தரவுபடி செய்தான் அவ்வன்பன். அந்த ஒரு தென்னங்கனியினின்றும் இரண்டு மரங்கள் வெடித்துக் கிளம்பின. இந்த அற்புதத் தென்னைமரங்கள் கோயிலின் வடபால் இன்றும் காட்சி அளிக்கின்றன.

வெட்டிக்கிடத்திய புளியமரம் இயற்கைக்கு மாருக வேர் விட்டுத்துளிர்த்த அதி அற்புதத்தை நிகழ்த்திய இப் பதியில் எழுந்தருளியுள்ள ஸ்ரீ முத்து மாரியம்மனுக்கு யாவும் எளிதன்ரே !

இன்னும் பற்பல அபூர்வ அற்புத நிகழ்ச்சிகள் இவ் வம்மையின் அருட் சக்தியால் நிகழ்ந்துள்ளன என்று கிராமத்தார்கள் சொல்லத் தெரிகிறது. அவற்றுள் பலர் சொல்லக் கேட்டுணர்ந்தவற்றை மாத்திரம் தொகுத்துக் கீழே சுருக்கமாகக் குறிக்கின்றேன்.

இவ்வூர் ஸ்ரீ முத்துமாரியம்மன் மிக வரப்பிரசாதி என்று யாவராலும் கொண்டாடப்படுகிறது. இதர மதஸ்தர்களும் இக் கோயிலுக்கு வந்து அம்மனை வழிபட்டு 'சர்வேந்திரியாணும் நயனம் பிரதானம்' என்று சொல்லப்படும் கண்பார்வையை அடைந்திருக்கிறார்கள் என்றால் இவ்வம்மனின் சக்திப்பிரபாவம் மிகப் பெரியது அல்லவா !

இவ்வாலயத்தில் அம்மனை வழிபட்டு நலமடைந்தவர் அநேகர் என்று ஊர்மக்கள் சொல்லத் தெரிகிறது. பலர் மக்கட்பேறு அடைந்துள்ளார்கள். கண் பார்வை அடைந்தவர் பலர். கணவரின் உயிர்ப்பிச்சை யடைந்தவர் அநேகர், பிணி நீங்கப்பெற்றவரெண்ணிலர், பேய், பிசாசு, பில்லி, சூனியம், ஏவல் முதலியவற்றால் பீடிக்கப்பட்டவர்கள் எத்தனையோ பேர் நலம் பெற்றுள்ளார்கள். யாவும் அம்மையின் அருட் சக்தியாலேயே நிகழ்ந்துள்ளன. இங்ஙனமாக எவ்வெவர் என்னென்ன இன்னல்களிலிருந்து நன்மையுற்றார்கள் என்று விவரிக்க இச் சிறு வரலாற்றில் இடமே போதாது.

இப்படி இக்கோயிலில் அம்மனுக்கு மாங்கல்யம் செலுத்துவோர் பலர், மற்றும் பற்பல பிரார்த்தனைகள் செலுத்த வருவோர் பலர், அபிடேகம் செய்வோர் பலர்; காவடி எடுப்போர் பலர், கரகம் எடுப்போர் பலர்; கோயிலில் இரவு தங்கிப்போக வருவோர் பலர்; கோயில் பிரதட்சிணம் செய்ய வருவோர்பலர்; ஆகவே கோயிலுக்கு வரும் அன்பர்களின் கூட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போகிறது.

## 11. கோயிலில் நிகழ்த்தும் சுபங்கள்.

இக் கோயிலில் குழந்தைகளுக்குச் சிகைநீக்கி காதணி பூட்டுதல், திருமணம் செய்தல் போன்ற சுபங்கள் நிகழ்கின்றன, மாரியம்மன் அருளுக்குப் பாத்திரம் ஆகும்

T. 6544

நோக்கத்தினுலேயே மக்கள் இத்தகைய சுபங்களை அம்மன் சந்நதியில் நிகழ்த்துகின்ருர்கள்.

## 12. ஸ்ரீ முத்து மாரியம்மனுக்குத் தொடர்புடைய மற்ற கோயில்கள்.

ஸ்ரீ முத்து மாரியம்மன் கோயிலுக்கு எதிரில் ஆர்ய மாலா, ஓந்தாயி சமேத மதுரைவீரன் ஆலயம் இருக்கிறது. மதுரைவீரன் ஸ்ரீமுத்துமாரியம்மனை நோக்கி நின்ற வண்ணமாகக் கோயில்கொண்டுள்ளான். இக்கோயிலுக்குள் முன் பக்கம் சற்று தெற்கே வடக்கு நோக்கி பேச்சிஆயி அமர்ந்துள்ளாள். இவள் மாரியம்மனின் மூத்தாள் என்று சொல்லப்படுகிறது. இவ்வம்மையார் ஓர் அரக்கனின் குடலைப் பிடுங்கி உண்ணும் கோலமாக உள்ளள். மதுரைவீரன் ஸ்ரீ மாரியம்மனுக்குக் காவல் புரிகின்றதாகக் கருதப்படுகிறது. இக் கோயிலுக்கு நான்கு புறம் மதில் சுவர் இருக்கிறது, மதுரைவீரன் ஆலயத்தைச் சுற்றிவர வசதியாக மதிலுக்குள் பிரகாரம் அமைந்திருக்கிறது. இக் கோயில் ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயில் உண்டானபின் உண்டான கோயில் என்று ஊரார் சொல்லத் தெரிகிறது.

## 13. தலவிருட்சங்கள்.

ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலுக்கு எதிரில் சற்று வடக்கே அதாவது கோயில் அலுவல் அகத்துக்கு நேர் கிழக்கில் அதிசய வரலாற்றுடன் கூடிய புளியமரம் இருக்கிறது. மரங்கள் சாதாரணமாக வேர் கீழ் நோக்கியும், கிளைகள் வானை நோக்கியும் இருப்பதற்கு மாருக இப் புளியமரம் கீழே வடக்குத் தெற்காகப் படுத்துள்ளது. மரத்தின் வடக்கு நுனியிலிருந்து வேர் கிளம்பி பூமிக்குள் சென்றிருக்கிறது. மற்றெரு பக்கத்திலிருந்து கிளைகள் கிளம்பி உள்ளன. கிளைகள் அதிகம் உயர்ந்து செல்லாமல் தாழ்ந்தே உள்ளன. மரத்தில் ஏராளமான காய்கள்

காய்க்கின்றன. இதன் வருவாய் கோயிலுக்குப் பயனு கிறது. இவ்வதிசயப் புளியமரம் ஸ்ரீ முத்துமாரியம்மனின் தல விருட்சமாக உள்ளது.

இஃதல்லாமல், இப் புளியமரம் தல விருட்சமாகப் பிரதான இடம் பெறுவதன் முன் இத்தலத்துக்கு வேம்பு தலவிருட்சமாக அமைந்திருந்தது என்று தெரியவருகிறது. இத்தலத்துக்கு வேம்பும் தல விருட்சமாகையால் தக்க முறையில் மரம் வைத்து வளர்க்க கோயிலார் முயற்சி எடுக்கவேண்டுமெனத் தோன்றுகிறது.

## 14. இத் தலத்தின் தீர்த்தங்கள்.

ஸ்ரீ முத்து மாரியம்மன் கோயிலுக்கு வடகிழக்கு மூலை யில் தல விருட்சமிருப்பதுபோல் தென் கிழக்கு மூலையில் கோயிலைச் சேர்ந்த திருக்குளம் அமைந்துள்ளது. குளத் துக்குப் படித்துறைகளும் அமைந்துள்ளன. இக்குளம் யாத்ரிகர்கள் நீராடுவதற்குத் தகுந்த வண்ணம் இருப்பது விரும்பத் தக்கது.

கோயிலுக்குத் தெற்கில் கிழக்குநோக்கி காவிரி யின் கிளைநதி ஓடுகிறது. இந்நதி ஸ்ரீ முத்துமாரியம்மன் கோயிலுக்குச் சமீபத்தில் ஓடுவதால் இந்நதியும் யாத்ரி கர்கள் நீராட அதிகம் பயன் படுகிறது. இதுவும் தலத் தின் தீர்த்தத்தில் ஒன்ருகும். ஸ்ரீ முத்து மாரியம்மனுக்குப் பக்தர்கள் இந்நதி தீரத்திலிருந்தே காவடி, கரகம் முதலி யன எடுத்துக் கொண்டு மாரியம்மன் ஆலயத்துக்குச் செல்வதால் இந்நதியின் புனிதமும் முக்கியத்துவமும் அதிகம் என்பதற்குச் சந்தேகமில்லை.

## 15. தல விசேடம்.

இத்தலத்தில் விநாயக மூர்த்திகள் இரண்டு, மாரி யம்மன் சிலைகள் இரண்டு, தல விருட்சங்கள் இரண்டு, தல தீர்த்தங்கள் இரண்டு என்று முன் சொல்லிய வர லாற்றிலிருந்து தெரியவரும். இத்தகையதோர் அமைப்பு

வேறெந்த மாரியம்மன் கோயிலிலும் இல்லாதது ஆகையால் மாதானம் ஸ்ரீ முத்து மாரியம்மன்கோயில் ஒப்புயர்வு அற்ற பெருமை உடையது ஆகும் என்று அன்பர்கள் நிச்சயமாக உணரக்கூடியது.

சிவத்தலங்களில் மிக்கது என்று விளங்குவதும் சிவம் 3, சக்தி 3, தீர்த்தம் 3, விருட்சம் 3 என்ற பெருமை வாய்ந்ததும், தென் சிதம்பரம் என்று புகழ் வாய்ந்ததும் ஆகிய திருவெண்காட்டின் பெருமையை அன்பர்கள் உணர்ந்ததே. அதுபோல் சிதம்பரத்திற்குத் தெற்காக உள்ளதும் திருவெண்காட்டை அடுத்துள்ளதுமான இம்மாரியம்மன் கோயிலும் இதன்முன்சொன்ன காரணத்தால் திருவெண்காட்டைப் போல் மாரியம்மன் கோயில்களுக்குள் ஒப்பிலாத் தலமாக இருக்கிறது.

## 16. கிராமத்துப் பொதுத் தகவல்கள்.

மாதானம் சாதாரணமான கிராமம். ஜனத்தொகை சுமார் 1700. இவ்வட்டார வருவாய்ச் சோதனைகர்த்தர் மூவரில் ஒருவரின் தலை இடமாக உள்ளது மாதானம். இவ்வூரில் ஒரு ஆரம்பப் பள்ளியும், ஒரு உயர்தர ஆரம்பப் பாடசாலையும். மருத்துவ விடுதியும், பஞ்சாயத்து அலுவலகமும், தபால் நிலையமும், கால்நடைப் பட்டியும் உள்ளன.

இவ்வூரில் சிவன் கோயிலும், அனுமார் கோயிலும் உள்ளன,

## 17. பிரயாணிகள் வசதி.

ஸ்ரீ முத்து மாரியம்மன் கோயிலுக்கு வரும் வெளியூர் அன்பர்கள் தங்குவதற்குத் தேவையான ஓட்டுக் கட்டிடம் அமைந்துள்ளது என்று முன்னே குறிப்பிட்டுள்ளது இக்கட்டிடத்தைப் பழுது பார்த்து இன்னமும் அதிக வசதிகள் செய்தால் வெளியூர் அன்பர்களுக்குமிக்க சௌகரியமாக இருக்கும். எல்லாவிதத்திலும் கோயிலின் நிர்வா

கத்தைச் செவ்வனே செய்துவரும் தர்மகர்த்தாக்களின் பெருமுயற்சியால் அன்பர்கள் எதிர்பார்க்கும் இந்த முன்னேற்றமும் சீக்கிரம் நிறை வேறும் என நம்பப்படுகிறது.

## 18. கோயில் நிர்வாகம்.

இக் கோயிலின் வருமானம் மிகக் குறைவு என்று இதன் முன் குறிப்பிட்டுள்ளது. இக் குறைவுள்ள வருமானத்தைக்கொண்டு நன்கு கோயிலை நிர்வகிக்க கோயிலின் பரம்பரை தர்மகர்த்தாக்களுக்கு வல்லமையும், வசதியும் உள்ளன என்று கோயில் சீரமைப்பிலிருந்து தெரிகிறது, இக் குடும்பத்தினர் வாழையடி வாழையாக இக்கோயிலின் நிர்வாகத்தைக் கவனிக்கும் பொதுப்பணியில் ஈடுபடும் புண்ணியவான்கள். அவர்களின் பணி மிகவும் மகத்தானது,

கோயிலின் தற்கால தர்மகர்த்தா **திரு. கு. சுப்பராய ராவுத்தமிண்ட நாயனூர்** ஆகும். இருப்பினும் இக் குடும்பத்தைச்சேர்ந்த திரு. **சச்சிதானந்த ராவுத்தமிண்டநாயனூர்** என்கிற **கு. சின்னசாமி துரை** அவர்களே கோயில் நிர்வாகப் பொறுப்பேற்று வருகிறார்கள். இவர்கள் இப் புத்தகம் எழுதி வெளியிடுவதில் மிகவும் ஆர்வம் உடையவர்கள். இம் முறையில் இவர்கள் "நூல்வந்த வாறு" என்னும் பகுதியில் கண்டுள்ள திரு. **வ. சு. செல்வம் அவர்களின்** நோக்கத்தை முழுதும் ஆதரிப்பவர்கள். இவர்கள் திரு. செல்வத்துக்குச் சிறிய தந்தையார் ஆகும். இத் தர்மகர்த்தா காலத்தில் கோயில் நிர்வாகம் பல முறையில் முன்னேற்றம் அடைந்துள்ளது.

இக் கோயிலின் முன் மண்டபத்தில் முன்புறம் அமைத்துள்ள கண்டாமணி தற்கால நிர்வாக தர்மகர்த்தாவினுலேயே அமைக்கப்பட்டது. இதன் நாதம் நன்ருக உள்ளது. இம்மணி அம்மனின் அருட்பிரபாவத்தை உலகுக்கு வெளிப்படுத்தும் ஒலிப்பெருக்கிபோல் உள்ளது.

கோயிலின் வாயிலுக்குச் சரவிளக்கு அமைக்கவும் தீவிரமாக வேலை நடந்து வருகிறது. இம் முயற்சியில் ஈடுபட்டுவரும் திரு. சின்னசாமிதுரை அவர்களின் சிறந்த நோக்கங்கள் யாவும் காலந் தாழாமல் நிறைவேறும் என்று யாவரும் விரும்புகிறார்கள். இதற்கு மாரியம்மனும் அருள்புரிய வேண்டும்.

இக் கோயிலுக்காக அரும்பாடுபட்டு வரும் இக்குடும் பத்தினருக்கு மாரியம்மன் திருவருள் பாலிக்க வேண்டு வோம்.

## 19, ஸ்ரீ முத்துமாரியம்மன் தரிசனப் பயன்.

தெய்வ சக்தியையே தங்கள் சக்தியாகக் கொள்ளும் மனப்பான்மை உடையவர்களால் ஆகாதது ஒன்றுமில்லை என்பது நாம் உணர்ந்த உண்மையாகும். "யாவும் கடவுள் செயல்" என்று கருதி கடவுள் சக்தியையே நம் துணையாகக் கொண்டு முயலுதல் பெரும் பயனை அளிக்க வல்லது. "முன்னவனே முன் நின்றால் முடியாதது ஒன்றுளதோ," என்றும், "அவன் இன்றி ஓரணுவும் அசையாது" என்றும் உண்மை உரைகள் உலகில் உலவுவது யாவரும் உணர்ந்தது. ஆகையால் எங்கும் வியாபித்து உள்ளதும், கோயிலில் கட்புலனாகும்வண்ணம் எழுந்தருளியுள்ளதும் ஆகிய தெய்வ சக்தியை வழிபட்டு, வேண்டிய வேண்டியாங்கு அடைவதற்கான ஒன்றுபட்ட எண்ணமும் முயற்சியும் அதற்கான தெய்வ நம்பிக்கையையும் உடையவர்கள் ஆயின் நினைத்ததை முடிக்கும் ஆற்றலை நாம் பெற்றவர்களே ஆவோம்.

இந்த நம்பிக்கை உடையவர்கள் தெய்வ பலத்தால் மிடியைத் தவிர்க்கவும். பிணியைத் தடுக்கவும், பிணியி னின்று சுகமடையவும், ஆபத்தைச் சமாளிக்கவும், பிறரின் துயரத்தை நீக்கும் சக்தியைப் பெறவும், உலகுக்குத்

தீங்கு நேரிடா வண்ணம் தெய்வ சக்தியை வேண்டவும், வேண்டியதை எல்லாம் அடையவும் தக்க ஆற்றல் பெறுவது சாத்தியமே, யாவும் சாத்தியமாவது சத்தியமே!

மக்கள் இப்படி தெய்வ சக்தியைப் பயன் படுத்திக் கொண்டு நலம் அடையவேண்டும் என்று கடவுள் கருணை கொண்டு கோயில்கொண் டுள்ளபோது, மனிதப் பிறவி எடுத்த நாம் அதன் உண்மையை உணராது இருப்போம் ஆயின் எடுத்த பிறவி பயன் அற்று அல்லவா போய் விடும்! பசித்த நேரத்துக்குப் புசிப்பதற்கான உணவு கிடைத்தும் அதை உண்டு பசியை ஒழிக்க ஒருவனுக்கு அறிவு இல்லையாயின் அவன் எப்படி பசியால் வாடுவானோ அதுபோல் கடவுள் நம் கண்ணுக்குப் புலனாகிக் கோயில்கொண் டிருக்கும் போது அக்கடவுட் சக்தியின் துணையை நாம் பெருதொழியின் பிறவித் துயரிலேயே வருந்த வேண்டுமே ஒழிய உய்யும் வழி இல்லாமற் போகும்.

ஆகவே, அன்னையினும் நம்மிடம் இரக்கம்கொண்டு தயாமூர்த்தியாக நம் இன்னலை எல்லாம் தன் அருள் நோக்கால் நீக்கும் பரம சக்திவாய்ந்த ஸ்ரீ முத்து மாரியம்மனைத் தொழுது நம் துயரங்களை எல்லாம் நீக்கி நிலையான சுகம் அடைய முற்படுவோம். பசித்த நேரம் உணர்ந்து தான் பெற்ற குழந்தைக்குப் பால் ஊட்டும் அன்னையினும் அளவு கடந்த காருணியம் உடையவள் நம் முத்து மாரியம்மன். துதிக்காதவரையும், அம்மையை மதிக்காதவரையும் கூட தடுத்தாண்டு கொண்டு தண்ணருள் புரியும் தயா சொரூபி முத்து மாரியம்மன். அவ்வம்மையின் அருட்செல்வத்தை அள்ளி அள்ளிக்கொடுக்க கோயிலிலே அமர்ந்துள்ளாள். நாம் அதைப் பெற இனியும் தாழ்த்தல் ஆகாது. இன்னே அதை அடைய ஸ்ரீ முத்து மாரியம்மன் சந்நிதிக்குச் சென்று பணிவோம்,

கை கூப்பித் தொழுவோம். ''அருள்தரவேண்டும்'' என்று இறைஞ்சுவோம். ''இடர் தவிர்ப்பாய்'' என்று மன்றாடிக் கேட்டுக்கொள்வோம். ''வருந்துவதற்கு எங்களுக்குச் சக்தி இல்லை!'' என்று விண்ணப்பித்துக் கொள்வோம். ''துன்பம் யாதொன்றும் எய்தாத வண்ணம் கடைக்கண் பார்!'' என்று கெஞ்சுவோம். ''ஸ்ரீ முத்து மாரியின் அடிகளில் பணிய எல்லோரும் வாருங்கள்'' என்று கூப்பிட்டுக்கொண்டே ''ஸ்ரீ முத்து மாரியம்மன் தரிசனத்தை''ப் பற்றிய இந்நூலை இனிது முடிக்கின்றேன்.

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக!

---

விண்ணுடையார் தமையுன்றன் விழிக்கடையால்
புரந்தளித்து மேலுந் தாழ்ந்திம்
மண்ணுடையார் தமக்கருள மாதானத்
தமர்முத்து மாரி அல்லால்
எண்ணுடையார்க் கன்னையென ஏன்றுகொளும்
அன்புடனிங் கிரங்கி நோக்குங்
கண்ணுடையார் பிறர் தம்மைக் கண்டதிலை
காக்குமொரு கடவுள் நீயே!

தல வரலாறு முற்றிற்று.

---

ஸ்ரீ முத்து மாரியம்மன் தரிசனம் முற்றுப்பெற்றது.

ஸ்ரீ முத்து மாரியம்மன் மலரடி வாழி.

சுபம்.

★

அன்பர்களுக்கான ... ...

... ... அறிவுரைகள்.

1. அன்பே கடவுள்
2. ஆண்டவன் நம் துணை
3. இறைவனை வணங்குவோம்
4. ஈவது சிவமயம்
5. உடைமை அவன் பொருள்
6. ஊழினை வெல்வோம்
7. எல்லாம் சிவன் செயல்
8. ஏத்துவம் கடவுளை
9. ஐந்தொழிற் கவனே
10. ஒன்றும் சிவன் அவன்
11. ஓமெனும் உருவினன்
12. ஔதாரியன் சிவன்.

---

நூல் ஆசிரியன்.